# செயற்சாதனை அறிக்கை
# 2009

இலங்கை புகையிரதத் திணைக்களம்

## முன் நோக்கு.

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பல்வேறு வகையான போக்குவரத்து சாதனங்களிற்கு மத்தியில் நிதிச் சுயாதீனத்துடன் கூடியதுமான பயன்மிக்க புகையிரதப் போக்குவரத்து சேவையொன்றை வழங்கள்.

## சேவைகள்

பயணிகளினதும் பொருட்களினதும் போக்குவரத்துக்காகப் பாதுகாப்பானதும் நம்பகரமானதும் குறிப்பிட்டுள்ள காலத்தில் சேவையில் ஈடுபடக் கூடிய கட்டமைப்பினையும் செயற்திறமை மிக்க புகையிரதப் போக்குவரத்து சேவை ஒன்றையும் வழங்குவோம்.

**குறிக்கோள்**

- புகையிரத நேர அட்டவணையை பயணிகளின் தேவைகளுக்கு ஏற்ப வினைத்திறனான சேவைகளை வழங்குவற்காக சேவைகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.
- வீழ்ச்சியடைந்து வந்த சொத்துக்களின் வினைத்திறமையை தக்கவைப்பதற்காக புனர்நிர்மானமும் மறுசீரமைப்புச்செய்தல். (உம். புகையிரத பாதை, சமிக்கை கட்டமைப்பு, புகையிரத அணி).
- புதிய சொத்துக்களுக்காக முதலீடுகள் செய்வதன் மூலம் சொத்துக்களின் அடித்தளத்தை வலுவடையச்செயதல். (அதிவேகத்தொடருர்திகள், புகையிரத இயந்திரம், பெட்டிகள்)
- வருமான வழிமுறைகளை வலுவடையச்செய்தல்.
- அமைப்புக்களின் தாபன சட்டத்தை தற்காலிக சவால்களுக்கு ஏற்றவகையில் திருத்தி அமைத்தல்
- மனிதவள அபிவிருத்தி

**செயற் சாதனை அறிக்கை –2009 ம் ஆண்டு**

**நிருவாகப்பிரிவின் செயற் சாதனை.**

**ஆளணி நிருவாக நடவடிக்கைகள்**:-

- நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்த பதவிகளுக்காக 2009 ம் ஆண்டினுள் 850 புதிய ஆட்சேர்ப்புக்கள் நடைபெற்றது.
- பதவி உயர்வு நடவடிக்கைகளை அமுல்படுத்தும்வகையில் பரிட்சைகள், நேர்முகப்பரீட்சைகளை நடாத்தி 951 பதவிகளுக்கு 2009 ம் ஆண்டில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது.
- 2009 ம் ஆண்டில் தொழிலாளர்கள் 60 பேர் ஓய்வூதியத்தில் சென்றனர்.

**தொழிலாலர் தொடர்புகள்:–**

தொழில் சங்கங்களுடன் அடிக்கடி பேச்சுவார்த்தைகளை தொடர்ச்சியாக நடத்தியதன் மூலம் அவசர சேவை இடைநிறுத்தம், வேலை பகிஷ்கரிப்பு, நாசவேலைகள் போன்றவை குறைவடைதல்.

**மக்கள் தொடர்பாடல்**:-

25 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த தொழிலாளர்களை கௌரவிப்பதற்காக சான்றிதல்கள், பரிசில்களை வழங்கும் வைபவங்களை நடாத்தி அவர்களின் சேவையை கௌரவித்தல்.

**மனிதவள முகாமைத்துவம்:–**

**உள்ளுர் பயிற்சிகள் (ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்ச்சி நிலையம்)**

2009 ம் ஆண்டினுள் இந்த நிலையம் மூலம் நடைபெற்ற கற்கை நெறிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

இயந்திர நிபுனர் கற்கை நெறி
டீசல் என்ஜின் இயந்திர நிபுனர் கற்கை நெறி
மோட்டார் இயந்திர நிபுனர் கற்கை நெறி
காச்சியடித்து இணைப்பவர் கற்கை நெறி
மின் இணைப்பாளர் கற்கை நெறி
ஆரம்ப தொழிநுட்ப கற்கை நெறி
தொழிநுட்ப கற்கை நெறி
ஆரம்ப மின் தொழில்நுட்ப கற்கை நெறி
மன அழுத்தத்தையும் அதன் காரணிகளையும் பரிசோதிக்கும் கற்கை நெறி

இலங்கை ஜேர்மன் புகையிரத தொழிநுட்ப பயிற்சி நிலையத்தினால் 2009 ம் ஆண்டிற்காக நடை பெற்ற முழு நேர பாட நெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்டமாணவர்கள் பற்றிய விபரம் கீழே காட்டப்பட்ட்டுள்ளது.

| கற்கை நெறி | இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|
| மோட்டார் இயந்திர நிபுனர் | 22 |
| டீசல் என்ஜின் இயந்திர நிபுனர் | 20 |
| மின் இணைப்பாளர் | 25 |
| காய்ச்சியடித்து இணைப்பவர் | 19 |
| இயந்திர நிபுனர் | 18 |

2009 ம் ஆண்டில் முழு நேர பாட நெறியை நிறைவு செய்த மாணவர்கள் பற்றி கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

| கற்கை நெறி | எண்ணிக்கை |
|---|---|
| டீசல் என்ஜின் இயந்திர நிபுனர் | 16 |
| மின் இணைப்பாளர் | 15 |
| காச்சியடித்து இணைப்பவர் | 21 |
| இயந்திர நிபுனர் | 14 |

2009 ம் ஆண்டில் முழு நேர கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆகும். அத்துடன் முழு நேர பாட நெறிக்காக புதிதாக 104 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

**வெளிநாட்டுப் பயிற்சி**

இந்திய கடன் உதவியின் கீழ் நடை பெறும் கரையோர புகையிரத பாதை புனரமைப்பு திட்டத்தின் கீழ் புகையிரத தொழிலாளர்கள் 600 நபர்களை இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சி கொடுப்பதற்கு எதிர்பார்பதுடன் அதில் 147 தொழிலாளர்களை 2009 ம் ஆண்டு முடிவடைவதற்குள் இந்தியாவுக்கு அனுப்பி உரிய பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

**உள்ளகக் கணக்காய்வு**

கீழ் காட்டப்படும் பிரிவுகளில் இந்த வருடத்தில் உள்ளக கணக்காய்வு இடம்பெற்றது.

| தொடர் இல. | இடம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புகையிரத நிலையங்கள் | 150 |
| 2 | உப புகையிரத நிலையங்கள் | 144 |
| 3 | மாவட்ட மின்சமிக்கை பரிசோதகர் அலுவலகஙகள் | 22 |
| 4 | இயந்திர மடுவங்கள் | 10 |
| 5 | நிரந்தர பாதை பரிசோதகர் அலுவலகங்கள் | 09 |
| 6 | கட்டிட பரிசோதகர் அலுவலகங்கள் | 05 |
| 7 | தொழிற்சாலைகள் | 02 |
| 8 | கணக்கு பிரிவுகள் | 10 |
| 9 | நிருவாகப் பிரிவுகள் | 05 |
| 10 | புகையிரத களஞ்சியம் | 01 |

இந்த கணக்காய்வுனூடாக ரூபா 10.00 – 100.00 க்கு இடைப்பட்ட தொகை வேறுபாடு 179 ம்,ரூ.101.00 -500.00 க்கு இடைப்பட்ட தொகை வேறுபாடு 78 ம்,ரூ.501.00 -1,000.00 க்கு இடைப்பட்ட தொகை வேறுபாடு 09 ம், ரூ. 5,000.00 க்கு மேற்பட்ட தொகை வேறுபாடு 16 ம் வெளிக்கொணரப்பட்டதன் பின் முன்னேற்பாடுகளுக்காக வெளிக்கொணரப்பட்ட தொகை வேறுபாடு / பிழைகள்/ தவறுகள் தொடர்பாக உரிய உப திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக இந்த வருடத்தினுள் மரதானை, இரத்மலானை, றாகம ஆகிய களஞ்சியங்களில் தொகை மதிப்பீடுகளும் செய்யப்பட்டது.

**கணக்காய்வு அதிகாரியின் கணக்கறிக்கை**

| தொடர் இல. | கணக்கறிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2009.01.01 ம் திகதிக்கு விடையழிக்கவிருந்த கணக்காய்வுகள் | 28 |
| 2. | 2009 ம் ஆண்டினுள் கிடைத்த கணக்கறிக்கைகள் | 48 |
| 3. | 2009 ம் ஆண்டினுள் விடையளிக்கப்பட்ட கணக்கறிக்கைகள் | 75 |
| 4. | 2009.12.31 ம் திகதியில் விடையழிக்கப்படாத கணக்கறிக்கைகள் | 01 |

**இயக்குநர் பிரிவு செயற்சாதனைகள்**

புகையிரத சேவையை உயர்த்தும் நோக்குடன் கீழ் காணப்படும் நடைமுறைகள் 2009 ம் ஆண்டினுள் நடைபெற்றது.

2009.04.05 ம் திகதியிலிருந்து கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு வரைக்கும் 2009.04.06 ம் திகதியிலிருந்து மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டை வரைக்கும் புதிய நகர கடுகதி புகையிரத சேவையொன்று ‘‘உதய தேவி’’ எனும் பெயரில் சேவையில் இணைக்கப்பட்டது.

2009.06.06 ம் திகதியிலிருந்து வவுனியா வரைக்கும் இடம்பெற்ற புகையிர சேவையை தாண்டிக்குளம் வரைக்கும் விரிவாக்கப்பட்டதுடன் அப்புகையிரதங்களை மீண்டும் தாண்டிக்குளத்திலிருந்து ஆரம்பிபதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ்வாண்டினுள்மட்டக்களப்பு/ பொலன்நறுவ/ மட்டக்களப்பு, திருமலை /கல்ஓயா /திருமலை இடையிலான புதிய புகையிரத பஸ் திட்டத்தை ஆரம்பித்தல்.

கொழும்பு கோட்டை / மாஹோ/ கொழும்பு கோட்டை இடையில் நடைபெற்ற அலுவலக புகையிரதத்திற்கு பிரயாணிகளின் வசதிக்காக புதிய அதிவேக தொடரை(எஸ்-10) பயன்படுத்தி குறுகிய நேரத்திற்குள் பயனம் செய்வதற்கு ஏற்றவாறு திருத்தியமைத்தல்.

கொழும்பு கோட்டை/ வவுனியா/ கொழும்பு கோட்டை இடையில் இடம்பெற்ற ‘‘யாழ்தேவி’’ கடுகதி புகையிரதங்கள் இரண்டும் 2009.05.06 ம் திகதியிலிருந்து நகர கடுகதி புகையிரதங்களாக அறிமுகப்படுத்தியதுடன் முன்பு அப்புகையிரதங்கள் தரித்துச்சென்ற புகையிரத நிலையங்களிலிருந்து பயனத்தை தொடங்கும் பிரயானிகளின் வசதிக்காக கொழும்பு கோட்டை/ திருமலை/ கொழும்பு கோட்டை (7081/ 7082 ) இடையில் இடம்பெறும் பயனிகள் புகையிரதத்திற்கு மேலும் ஐந்து பெட்டிகளை இணைத்து மகவ வரைக்கும் கொண்டு சென்று அங்கிருந்து தனி புகையிரதமாக மதவாச்சி வரைக்கும், மீண்டும் மதவாச்சியிலிருந்து மகவ வரைக்கும் வந்து மீண்டும் திருமலையிலிருந்து கொழும்பு கோட்டை வரை செல்லும் (7082) புகையிரதத்துடன் இணைந்து கொழும்பு கோட்டைக்கு வருவதற்கு வசதிகள் அமைத்துக் கொடுத்தல்

2009.03.09 ம் திகதியிலிருந்து‘‘சமுத்ரதேவீ’’ புகையிரதத்திற்கு அதிவேக தொடர் (எஸ்-10) புகையிரத பெட்டியை அறிமுகப்படுத்தியமை.

2009.08.31 ம் திகதியிலிருந்து 8751 ம் இலக்க புகையிரதத்திற்கு புதிய சீன அதிவேக தொடரொன்று அறிமுகப்படுத்தியதால் பாணதுறை- களுத்துறை தெற்குக்கு இடையில் பொதிகள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக 8741 ம் இலக்க புகையிரதத்தை களுத்துறை தெற்கு வரைக்கும் நீடித்தல்.

2009.11.05 ம் திகதியிலிருந்து 8390 ம் இலக்க புகையிரதத்திற்கு கள்வர்களினால் ஏற்படும் சேதத்தை குறைப்பதற்காக கடுகதி பயனத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2009.06.12 ம் திகதியிலிருந்து இதுவரைக்கும் கொஸ்கம வரைக்கும் இடம் பெற்ற 9268 ம் இலக்க புகையிரதத்திற்கு பதிலாக 9269 ம் இலக்க புகையிரதத்தை கொஸ்கம வரைக்கும் இடம்பெற செய்தமை.

2009.09.17 ம் திகதியிலிருந்து 1140 ம் இலக்க கொழும்பு கோட்டை/ வேயன்கொடை உம் 1539 ம் இலக்க வேயன்கொடை/ கொழும்பு கோட்டை இடையில் புகையிரத சேவையை ஏற்படுத்தியமை.

2009.08.24 ம் திகதியிலிருந்து 1152 ம் இலக்க கொழும்பு கோட்டை/ பொல்கஹவெல உம் 1576 ம் இலக்க பொல்கஹவெல கொழும்பு கோட்டைக்கும் இடையில் புகையிரத சேவை.

2009.05.06 ம் திகதி மேற்கொண்ட வடக்கு பாதை புகையிரதங்களின் நேரஅட்டவணை திருத்தியதனால் அதற்கு சமமாக பிரதான பாதையில் புகையிரத நேர அட்டவணையில் திருத்தம் செய்தல்.

புதிதாக புகையிரத சேவைகளை இணைக்காமல் பிரயாணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்குடன் பிரயாணிகளின் வேண்டுகோள்களுக்கு அமைவாக பிரயாணிகள் புகையிரதங்களின் நேர அட்டவணைகள் திருத்தியமைக்கப்பட்டன.



2009 ம் திகதியில் இருந்து 20 வருடங்களில் வவுணியாவுக்கு அப்பால் (தாண்டிக்குளம்) புகையிரதம் பயனம் செய்த வேளை.



கிழக்கு மாகாணத்தினுள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட் புதிய புகையிரத பஸ் திட்டத்தின் கீழ் அறிமு கப்படுத்திய புதிய புகையிரதபஸ் பயனத்திற்கு ஆயத்தமபன போது.



கொழும்பு கோட்டை மட்டக்களப்புக்கு இடையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "உதயதேவீ" கடுகதி புகையிரதம் சேவையில் ஈடுபடும் போது.

**தடம் புரழுதல்**

| விபரம் | 2008 | 2009 |
|---|---|---|
| ஓடு பாதைகளில் | 60 | 63 |
| புகையிரத முற்றங்களில் | 104 | 108 |
| மொத்தம் | 164 | 171 |

2008 ம் ஆண்டில் 164 ஆகிய புகையிரத தடம்புரலுதல்கள் 2009 ம் ஆண்டில் 171 வரை அதழகரித்துள்ளது.




2009.06.06 ம் திகதி தலாவ புகையிரத நிலையத்திற்கரிகில் கொழும்பு- அநுராதபுரம் எண்ணெய்ப் புகையிரதம் தடம் புரண்ட வேளை.

**புகையிரத விபத்துக்கள்**

கீழே உள்ள அட்டவணை மூலம் 2008, 2009 ம் ஆண்டுகளில் புகையிரத குறுக்குப் பாதைகளில் இடம் பெற்ற விபத்துக்களும், ஏனைய விபத்துக்களும் காட்டப்பட்டுள்ளன.

| விபரங்கள் | 2008 | 2009 |
|---|---|---|
| புகையிரத மோதல்கள் | 09 | 05 |
| ஏனைய விபத்துக்கள் | 36 | 15 |
| குறுக்குப்பாதைகளில் மோட்டார் வாகன மோதல்கள் | 43 | 66 |
| மோட்டார் வாகனங்களினால் குறுக்குப்பாதை தடைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் | 207 | 181 |
| தீ விபத்துக்கள் | 01 | 01 |
| பயங்கரவாதத் தாக்குதல்கள் | 06 | - |
| புகையிரதத்தில் மோதியதனால் இறந்த மாடுகளின் எண்ணிக்கை | 01 | 25 |
| புகையிரதிதில் மோதியதனால் இறந்த யானைகளின் எண்ணிக்கை | 06 | 09 |

புகையிரத குறுக்கு பாதைகளில் இடம் பெறும் மோதல் உட்பட ஏனைய அவசர விபத்துக்களின் எண்ணிக்கை 2008 ம் ஆண்டில் 305 ஆனதுடன் 2009 ம் ஆண்டில் 302 ஆகும். இந்த வருடங்களில் புகையிரதத்துடன் மோதல்கள் 05 ம், ஏனைய விபத்துக்கள் 15 ஆகவும் காணப்ப டுகிறது. இது சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது சிறிதளவு குறைவென்று காட்ட முடியும். புகையிரத குறுக்குப் பாதைகளில் மோட்டார் வாகணங்கள் மோதிய எண்ணிக்கை 2008 ம் ஆண்டுடன் ஒப்படும் போது உயர்வடைந்துள்ளது. அத்துடன் மோட்டார் வாகனங்களினால் குறுக்குப் பாதைகளுக்கு ஏற்பட்ட விபத்துக்கள் 207 இருந்து 181 வரை குறைவடைந்துள்ளது. 30 வருட கொடூர யுத்தம் நிறைவடைந்ததுடன் இந்த வருடத்தினுள் எவ்வித பயங்கரவாத தாக்குதல்களும் ஏற்படவில்லை. புகையிரதத்துடன் மோதியதனால் ஏற்பட்ட மாடுகளின் எண்ணிக்கை 2008 ம் ஆண்டில் 01 ஆகவும் அது 2009 ம் ஆண்டில் 25 ஆகவும் கூடிக் காணப்படுகிறது. யானைகள் புகையிரதத்துடன் மோதி இறந்த எண்ணிக்கை இவ்வருடத்தில் 09 ஆகும்.

**புகையிரத விபத்துக்களினால் மக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள்.**

| காரணிகள் | 2008 காயம் | 2008 மரணம் | 2009 காயம் | 2009 மரணம் |
|---|---|---|---|---|
| தடம்புரழ்வதனால் ஏற்பட்ட புகையிரத பயணிகளின் காயங்களும் மரணங்களும் | 06 | - | 10 | - |
| புகையிரதத்தில்மோதியதனால் ஏற்பட்ட புகையிரத பயணிகளின் காயங்களும் மரணங்களும் | 12 | 01 | 02 | – |
| புகையிரதத்தினிலிருந்து விழுந்ததினால் ஏற்பட்ட புகையிரத பயணிகளின் காயங்களும் மரணங்களும் | 03 | - | 21 | 01 |
| புகையிரததிற்கு கல் வீசியதால் ஏற்பட்ட காயங்களும் மரணங்களும் | 04 | - | 09 | - |
| புகையிரதக் குறுக்குப்பாதைகளில் மோட்டார் வாகனங்கள் புகையிரதத்துடன் மோதியதனால் மக்களுக்கு ஏற்பட்ட விபத்து | 33 | 16 | 83 | 20 |
| புகையிரத பாதையில் புகையிரதத்துடன் மோதியதனால் ஏற்பட்ட தற்கொலைகள் | 140 | 80 | 93 | 98 |

2009 ம் ஆண்டில் தடம் புரழ்வதினால் பிரயாணிகள் 10 பேருக்கு காயம் ஏற்பட்டதுடன் மரணம் ஏதும் ஏற்படவில்லை. புகையிரதத்தில் மோதியதினால் பயணிகள் 2 பேருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. 2008 ம் ஆண்டில் புகையிரதத்திலிருந்து விழுந்ததினால் மரணம் ஏதும் ஏற்படவில்லை. ஆகினும் 2009 ம் ஆண்டில் ஒரு மறணம் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று மோட்டார் வாகனங்கள் புகையிரத குறுக்குப் பாதைகளில் புகையிரதத்துடன் மோதியதனால் 2008 ம் ஆண்டில் ஆள் மரணம் 16 ஆனதுடன் அது 2009 ம் ஆண்டில் 20 வரை அதிகரித்துள்ளது. இவ்விபத்துக்களில் அதிகமானவை பாதுகாப்பான புகையிரத குறுக்குப்பாதைகளில் மோட்டார் வாகன ஓட்டுநரின் கவலையீனம் காரணமாக ஏற்பட்ட விபத்துக்கள் என காட்ட முடியும். புகையிரதத்தில் மோதி தற்கொலை செய்து கொண்டவர்கள் 2008 ம் ஆண்டில் 80 ஆகவும், அது 2009 ம் ஆண்டில் 98 ஆகவும் பதிவாகி உள்ளது.

**காலத்துக்குகந்த இயங்கங்கள்**

| விபரங்கள் | உத்தேசித்த புகையிரத எண்ணிக்கை | நடைபெற்ற புகையிரத எண்ணிக்கை | ஊரிய நேரத்திற்கு நடைபெற்ற புகையிரத எண்ணிக்கை | தாமதித்து நடைபெற்ற புகையிரத எண்ணிக்கை | | | | இரத்துச் செய்யப்பட்ட பு.எண். |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிமி. 06–10 | நிமி. 11–30 | நிமி. 31–60 | நிமி. 60 க்கு மேல் | |
| **1. பயணிகள்** | **117.927** | **109.717** | **38.483** | **16.812** | **34.575** | **12.596** | **8.210** | **8.210** |
| குறுகிய | 65,613 | 63,799 | 26,730 | 11,413 | 20,090 | 4,499 | 1,067 | 1,814 |
| தூார கடுகதி | 17,013 | 16,924 | 2,633 | 2,090 | 5,833 | 3,646 | 2,672 | 89 |
| பிரதேச | 35,301 | 28,994 | 9,120 | 3,309 | 8,602 | 4,451 | 3,512 | 6,307 |
| **11. பொருள்** | 7,953 | 4,978 | 693 | 100 | 341 | 602 | 3,242 | 2,975 |
| **மொத்தம்** | 125,880 | 114,695 | 39,176 | 16,912 | 34,916 | 13,198 | 10,493 | 11,185 |

இவ்வருடத்தினுள் இயக்குவதற்காக திட்டமிடப்பட்ட பிரயாணிகள் புகையிரத எண்ணிக்கை 117,927 ஆகும்.இதில் நடைபெற்ற எண்ணிக்கை 109,717 ஆகும். இது 93% சதவீதமாகும். பொருட்கள் புகையிரதம் தொடர்பாக எதிர்பார்கப்பட்ட எண்ணிக்கையில் 63% சதவீதமானவை நடைபெற்றுள்ளது. ஓட்டுமொத்தமாக திட்டமிடப்பட்ட புகையிரத எண்ணிக்கை 125,880 ல் 114,695 புகையிரதங்கள் நடைபெற்றுள்ளது. இது மொத்த புகையிரத எண்ணிக்கையில் 91% சதவீதமாகும்.

சரியான நேரத்திற்கு நடைபெற்ற பிரயாணிகள் புகையிரதம் 35% ஆகவும். பொருட்கள் புகையிரதம் 14% ஆனதுடன் பொருட்கள், பயணிகள் ஆகிய இரு பிரிவுகளிலும் சரியான நேரத்திற்கு புகையிரதம் நடைபெற்ற சதவீதம் 34% ஆகும். இது 2008 ம் ஆண்டில் 30% சதவீதமாகும்.

**புகையிரத கிலோ மீற்றர் அளவு**

| விபரங்கள் | அதிவேக தொடர் நடை பெற்றவை | அதிவேக தொடர் இரத்துச் செய்யப் பட்டவை | டீசல் புகையிரதம் நடை பெற்றவை | டீசல் புகையிரதம் இரத்துச் செய்யப் பட்டவை | நடைபெற்ற எண்ணிக் கை | இரத்துச் செய்யப் பட்ட எண்ணிக் கை |
|---|---|---|---|---|---|---|
| **1. பயணிகள்** | **3,046,226** | **57,560** | **5,937,066** | **277,313** | **8,983,292** | **334,873** |
| குறுகிய | 2,947,326 | 45,218 | 774,021 | 14,282 | 3,721,347 | 59,500 |
| தூார,கடுகதி | | | 3,593,956 | 54,804 | 3,593,956 | 54,804 |
| பிரதேச | 98,900 | 12,342 | 1,569,089 | 208,227 | 1,667,989 | 220,569 |
| **11. பொருட்கள்** | | | **326,669** | **182,203** | **326,669** | **182,203** |
| **வெற்றுப் புகையிரதம்** | **20,152** | | **59,930** | | **80,082** | |
| **இலகுவான புகையிரதம்** | | | **49,861** | | **49,861** | |
| **மொத்தம்** | **3,066,378** | **57,560** | **6,373,526** | **459,516** | **9,439,904** | **517,076** |

**விசேட புகையிரத கிலோ மீற்றர்**

| விபரங்கள் | பயணிகள், பொருட் களுடன்கூடிய டீசல் புகையிரதம் | புயணிகள், பொருட்களற்ற டீசல் புகை யிரதம் | பயணிகள், பொருட் களுடன்கூடிய நீராவி புகையிரதம் | பயணிகள், பொருட் களற்ற நீராவி புகையிரதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விசேட பயணிகள் புகையிரதம் | 43,844 | 665 | | | 44,509 |
| விசேட பொருட்கள் புகையிரதம் | 56,956 | | | | 56,956 |
| சேவை புகையிரதம் | 13,816 | 1,153 | | | 14,969 |
| ஹிதாசி | 458 | 394 | | | 852 |
| றயல் (பரிசோதனை) | 1,141 | | | | 1,141 |
| வைஸ்றோய் | 339 | | 1,499 | 429 | 2,267 |
| பெலஸ்ட் | 24,311 | | | | 24,311 |
| மோட்டார் ரொளி | 19,803 | | | | 19,803 |
| சுண்ணாம்பு கற்கள் | 7,795 | 7,795 | | | 15,590 |
| றெக் மோட்டார் கார் | 864 | | | | 864 |
| பிறேக் டவுன் | 2,905 | | | | 2,905 |
| ஏனயவை | 578 | | | | 578 |
| மொத்தம் | 172,810 | 10,007 | 1,499 | 429 | 184,745 |

**புகையிரத அணி:–**

அண்மையில் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதானமாக பயன்படுத்தப்படும் இயந்திர தொகுதியான டீசல் மின் இயந்திரங்களை ஒரு நாளைக்கு வழங்கிய அண்ணளவு எண்ணிக்கை 50 ஆக இருந்தது. இந்நிலைமைகளை அதிகரிப்பதற்காக புகையிரத இயந்திரங்கள் திருத்தியமைக்கையில் தொழிற்சாலைகளிலும் இயந்திர மடுவங்களிலும் செல்லும் நேர சுழற்சியை மேலும் குறைப்பதற்காக அவசர வேலை அட்டவணை அறிமுகப்படுத்தப்பட்டது. இயந்திர மடுவங்களை அபிவிருத்தி செய்யும் வேலை அட்டவணை மூலம் தினமும் திருத்தியமைக்கப்படும் வேலையட்டவணைகளின் தரத்தை உயர்த்தக்கூடியதாக இருந்தது. வருட முடிவில் நாளொன்றுக்கு வழங்கப்படும் டீசல் மின் இயந்திரங்களின் எண்ணிக்கை அண்ணளவாக 55 ஆக கொண்டுவர முடிந்தது.

மேலும் அதிவேகத்தொடர்கள் 15ஐ அறிமுகப்படுத்தியதன் மூலம்கொழும்பை அண்மித்த சேவைகளை வலுப்படுத்தக்கூடியதாக முடிந்தது. இங்கு பின்பற்றப்பட்ட உபாயமானது அண்மித்த சேவை புகையிரதங்களில் பிரயாணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதாகும். இதற்காக சனநெரிசல் மிக்க நேரங்களில் இரட்டை அதிவேக தொடர்கள் பயன்படுத்தப்பட்டது.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய பயணிகள் பெட்டிகள் 100 ஐ புகையிரத அணியுடன் (கட்டமைப்புடன்) இணைத்ததன் மூலம் பயணிகள் சேவைகளின் வசதிகளை மென்மேலும் அதிகரிக்கக்கூடியதாக இருந்தது. இருந்தும் பயணத்தின் போது ஏற்படும் தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக இப்பெட்டிகள் தற்காலிகமாக றமுக்கணைக்கு அப்பால் நடைபெறுவதை நிறுத்த வேண்டியேற்பட்டது.

கீழ் குறிப்பிடப்படும் தரவுகள் மூலம் இரத்மலானை தொழிற்சாலையில் இடம்பெற்ற பிரதான திருத்த வேலைகள் காட்டப்படுகிறது.

**இயந்திரம்/ பொருட்கள்பெட்டி/ பயணிகள்பெட்டி மேற்பார்வை**

| விபரம் | உத்தேசம் | நிறைவு செய்த பிரதிபலன் |
|---|---|---|
| **என்ஜின், அதிவேக தொகுதிகள் திருத்தியமைத்தல்** | 58 | 45 |
| **பயணிகள் பெட்டிகள்** | 295 | 204 |
| **பொருட்கள் பெட்டிகள்** | 151 | 151 |

இதற்கு மேலாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த எம்-5 இன என்ஜின்கள் இரண்டிற்கு புதிய டீசல் என்ஜின்களை பொருத்தி சேவையில்ஈடுபடுத்தப்பட்டது. மேலும் பயணிகள் பெட்டிகள் 15 திருத்தியமைக்கப்பட்டு சேவையில் இணைக்கப்பட்டது.

**இயக்க வலு வழங்கள்**

**இயக்க வலு அடிப்படை வசதிகள்**

ரூ. 120 மில்லியன் செலவில் கொழும்பு இயந்திர மடுவத்தை நவீனமாக்கும் திட்டத்தின் கீழ் கீழே குறிப்பிடப்படும் முன்னேற்றம் கிடைத்துள்ளது.

1. மாளிகாவத்தை முற்றம்:- தொழிற்சாலை, பயணிகள் பெட்டிகளை சுத்தம் செய்யும் கட்டமைப்பை நவீனமாக்கி பாரம் மேலே தூக்கும் இயந்திரத்தை (Hoist) பொருத்துதல். நீர் வழிந்தோடக்கூடியதாக வடிகாலமைப்பை சுத்தம் செய்தமை.
2. இயந்திர மடுவம்- தெமட்டகொட:-
   எல்லா வீண்விரையங்களையும் அகற்றி 'டர்ன் டேபல்' மீண்டும் ஸ்தாபித்தல் .
3. கொழும்பு முற்றம்:-
   கொழும்பு முற்றத்திலுள்ள தொழிற்சாலைகள் நவீனமாக்கப்பட்டதுடன், சன்டிங் சாரதிகளுக்காக இளைப்பாறும் அறைகள் கட்டிக்கொடுக்கப்பட்டது.
4. அதிவேகஇயந்திர மடுவம்-மாளிகாவத்தை:-
   புதிய தொழிற்சாலையொன்றை அமைத்தல்.

   5.மின் அதிவேக இயந்திர மடுவம்:-
   இயந்திர மடுவமொன்றை புதிதாக இணைத்து அங்கு தொழிலாளர்களுக்காக இளைப்பாறும் அறைகள் வசதிகளை பெற்றுக்கொடுத்தமை.

கரையோர புகையிரத பாதையை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மாளிகாவத்தை, அழுத்காமம், காலி போன்ற இடங்களில் இயந்திர மடுவங்களை அமைக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன.

**சாதாரணமாக அன்றாட இயக்க வலு வழங்கல்:–**

**டீசல், நீர்மின் புகையிரத என்ஜின்**

| விபரம் | W1 | W2 | W3 | Y | S5 |
|---|---|---|---|---|---|
| பழுதுபார்பிலுள்ள எண்ணிக்கை | 3 | 2 | 10 | 28 | 3 |
| சேவைக்குத் தேவைப்பட்ட எண்ணிக்கை | 2 | 0 | 8 | 20 | 2 |
| சேவைக்காகக் கிடைத்த எண்ணிக்கை | 1 | 0 | 8 | 20 | 1 |

**டீசல் மின் என்ஜின்**

| விபரம் | M2 | M4 | M5 | M5A | M5B | M5C | M6 | M7 | M8 | M8A | M9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பழுதுபார்பிலுள்ள எண்ணிக்கை | 13 | 14 | 0 | 0 | 4 | 6 | 14 | 15 | 8 | 2 | 10 |
| சேவைக்கு தேவைப்பட்ட எண்ணிக்கை | 10 | 10 | 0 | 0 | 3 | 4 | 11 | 11 | 6 | 1 | 4 |
| சேவைக்காகக் கிடைத்த எண்ணிக்கை | 10 | 8 | 0 | 0 | 2 | 4 | 10 | 9 | 5 | 1 | 3 |

**அதிவேக தொடர்கள்:–**

| விபரம் | S3 | S6 | S7 | S8 | S9 | S10 |
|---|---|---|---|---|---|---|
| பழுதுபார்பிலுள்ள எண்ணிக்கை | 0 | 4 | 5 | 20 | 15 | 15 |
| சேவைக்குத் தேவைப்பட்ட எண்ணிக்கை | 0 | 2 | 2 | 15 | 10 | 14 |
| சேவைக்காகக் கிடைத்த எண்ணிக்கை | 0 | 1 | 1 | 15 | 10 | 12 |

இவ்வருடத்தினுல் சேவையை நடைமுறை படுத்துவதற்காக தேவைப்பட்ட டீசல் என்ஜின்களின் எண்ணிக்கை 60 ஆகும். அதை 52 என்ற மட்டத்தில் வைத்து நடைமுறைபடுத்திக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அதேபோல் இவ்வருடத்தினுள் சாதாரன சேவைகளுக்காக அதிவேகத்தொடர் 43 தேவைப்பட்டதுடன் அதை 39 என்ற மட்டத்தில் வைத்து செயற்படுத்திக் கொள்ள முடியுமாக இருந்தது.

**அடிப்படைத்தேவைகள்**

**புகையிரத பாதை அபிவிருத்தி:–**

வருடாந்தம் புகையரத பாதை புனரமைப்பு வேலைத்திட்டம் தொடர்ந்து நடைமுறை செய்யப்பட்டதுடன் வருட முற்பகுதியில் புகையிரத பாதையில் குறைபாடுகளாள் போடப்பட்டிருந்த வேக எல்லை 810 ல் 460 (921 கி.மீ.) ஐ அகற்ற முடிந்தது. இருந்தும் தேவையானளவு முதலீடுகள் கடந்த காலங்களில் நடைபெறாததினால் இந்த சொத்துக்களில் திடீர் வீழ்ச்சியை கடந்த தசாப்ததினுல் காணக்கூடியதாக இருந்தது. அதனால் தொடர்ந்து இடம்பெறும் இந்நிலமை காரணமாக வேக எல்லை போடுவது தொடர்சியாக நடைபெற்றது.

இந்த வருடத்தினுள் புதிய தண்டவாளம் 1197 ம், கொங்றீட் சில்பர் கட்டை 143667 ம், பெலஸ்ட் கியூப் 22327 ம், புகையரத பாதையை பலப்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது.

**பாதைகள் பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்.**

| பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|
| தண்டவாளங்கள் (90’ 66) | 1,197 |
| தண்டவாளங்கள் (45’S/H) | 2,500 |
| மர சில்பர் கட்டைகள் | 143,667 |
| கொங்றீட் சில்பர் கட்டைகள் | 46,515 |
| பெலஸ்ட் (கியூப்) | 22,327 |
| சேவை புகையிரதம் | 401 |

**பராமரிப்பு வேலை**

| விபரம் | மணிக்கு கி.மீ.10 க்கு கீழ் | மணிக்கு கி.மீ.10 க்கு மேல் |
|---|---|---|
| 2009.01.01 ல் இருந்த வேக எல்லை எண்ணிக்கை | 85 | 727 |
| 2009 ம் ஆண்டில் அகற்றப்பட்ட வேக எல்லை எண்ணிக்கை | 85 | 514 |
| 2009 ம் ஆண்டினுள் புதிதாக சேர்க்கப்பட்ட வேக எல்லை எண்ணிக்கை | 85 | 472 |
| 2010.01.01 ல் இருந்த வேக எல்லை எண்ணிக்கை | 85 | 685 |

மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மத்தியிலும் கீழ் தரப்படும் புதிய பாதைகள் இவ்வருடத்தினுள் நிர்மாணிக்கப்பட்டது.

குடஹகபொலயிலிருந்து சீதுவ வரை (இரட்டை) - கி.மீ. 3

வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வரை - கி.மீ. 3

தாண்டிக்குளமிலிருந்து ஓமந்தை வரை - கி.மீ.10 (நிர்மாணிக்கப்படுகின்றது)

ஒருகொடவத்தயிலிருந்து களணி வரை - கி.மீ. 2 (நிர்மாணிக்கப்படுகின்றது)

களுத்துறை தெற்குலிருந்து பயாகல வரை - (ஆரம்ப வேலைகள் நடைபெறுகிறது)

**பாலங்கள்:–**

- மீரிகம 1x100’ பாலத்தின் மேலமைப்பு நிர்மாணப்பணிகளை முடித்தல்.
- பெந்தொட்ட 1x100’ பாலத்தின் மேலமைப்பு நிர்மாணப்பணிகளை முடித்தல்.
- பிரதான பாதையில் மைல் 98 ச.4, மை.104 ச.74, மை. 116 ச.3 ஆகிய இடங்களிலுள்ள பாலங்களிள் பெரிய சில்பர் கட்டைகளுக்கு பதிலாக (Longitudinal) ஐ பாலத்தின் மேல் பொருத்தியமை.
- தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரைக்குமிருந்த பழுதடைந்த 2 பாலங்களை திருத்தியமைத்ததுடன் இன்னும் ஒரு பாலம் திருத்தியமைக்கப்படுகின்றது.
- பெந்தொட்ட, வெள்ளவத்த பாலங்களில் உக்கிப்போன பகுதிகளை அகற்றி புனரமைத்தமை.
- கொடகல, குடாவெவ, பத்துளுஓய, செனறத்கம பாலங்களை பரிசோதனை செய்து உறுதிப்படுத்தியமை.

**கட்டிடங்கள்:-**

கீழ் குறிப்பிடப்படும் கட்டிடங்கள் திருத்தி புனரமைக்கப்பட்டது.

. புகையிரத நிலையங்கள் - 42
. அலுவலகங்கள், களஞ்சியங்கள்,நலன்புரிசங்கங்கள் - 10
. உத்தியோக விடுதிகள், சிற்றூழியர் விடுதிகள் - 43
. நீர் மின் வழங்குதல் - 19
. தங்குமிடங்களும் இளைப்பாறும் அறைகளும் - 15
. தொழிற்சாலைகளும் ஏனைய அமைப்புக்களும் - 08
. சுரங்க பாதைகளும் மதில்களும் - 06
. வடிகால் அமைப்புக்கள் - 07
. பாலங்களின் கீழமைப்புக்கள் - 08

**சமிக்கை கட்டமைப்பு**

2008 ம் ஆண்டினுள் வருடாந்த சமிக்கைப் பிழைகளின் எண்ணிக்கை 2806 ஆகும். இதை 2009 ம் ஆண்டில் 2198 வரை குறைப்பதற்கு முடிந்தது. இது 21 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2008 ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2009 ம் ஆண்டில் தினசரி சாதாரன பிழைகளின் எண்ணிக்கை 8 இருந்து 6 ஆக குறைத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

**சமிக்கை கோலாருகளின் எண்ணிக்கை:-**

| விபரம் | 2008 | 2009 |
|---|---|---|
| மத்திய மாவட்டம் | 1177 | 835 |
| கீள் மாவட்டம் | 682 | 631 |
| வடக்கு மாவட்டம் | 209 | 333 |
| மேல் மாவட்டம் | 648 | 494 |
| மொத்தம் | 2806 | 2193 |
| அண்ணளவு பிழைகள்(தினசரி) | 8 | 6 |

சமிக்கை கட்டமைப்பு பராமரைப்பின் கீழ் ஒருமுகப்படுத்திய (C/L) முற்றங்கள் 6 ம் இயந்திர (Mechanical) முற்றங்கள் 6 ம் பராமரிப்புச்செய்வதற்கு உத்தேசித்ததுடன் வருட இறுதிக்குள் 02 ஒருமுகப்படுத்திய முற்றங்களையும் 04 இயந்திர முற்றங்களையும் செய்து முடிக்கப்பட்டது.

மரதானை / கோட்டை 4வது பாதையையும், ஒறுகொடவத்த/ களணி 3 வது பாதைய மைப்புத்திட்டங்களின் திட்டமிடல்களை செய்து ஏனைய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

மரதானை/வாத்துவக்கிடையில் புதிய வர்ண சமிக்கை கட்டமைப்பொன்றை அமைக்கும் திட்டத்திற்கான தொழிநுட்ப செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளது.

**புகையிரத குறுக்குப்பாதைகள்**

2009.01.01 ம் திகதியில் 315புகையிரத குறுக்குப்பாதைகள் திணைக்களத்தினால் பராமரிப்புச் செய்யப்பட்டதுடன் 2009 ம் ஆண்டினுல் 10 குறுக்குப்பாதைகளை அமைக்க உத்தேசித்திருந்த போதும் அதை வருட இறுதிக்குள் 13 வரை அதிகரிக்க முடிந்ததாக இருந்தது. அதன்படி பேரலந்த,இந்திபறப்பே, பொல்கஹவெல புகையிர பாதை, கடுநாயக்க (Cargo Line), கெடெம்பே,அமுனுகம, முத்தெட்டுகல, முல்கம்பொல, பிலிமதலாவ, காக்கபள்ளிய, கொலதென்ன, தெய்யன்னவெல, பண்டாரவெல புகையிரத பாதையாகிய இடங்களில் குறுப்புப்பாதைகளின் புனரமைப்பு நிறைவு செய்யப்பட்டது.

**புகையிரத நிலையங்களின் விருத்தி**

2009 ம் ஆண்டினுள் திறக்கப்பட்ட புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை 2 ஆவதுடன் அவை கெலிஒய, தாண்டிக்குளம் ஆகிய நிலையங்களாகும்.

இந்த வருடத்தினுள் உப புகையிரத நிலையங்கள் 3 திறக்கப்பட்டதுடன் அவைகள் மீகம்மன, பல்லேதலவின்ன, பெக்கிரிவத்த ஆகிய உப புகையரத நிலையங்களாகும்.



தாண்டிக்குளம் புகையிரத நிலையம்.



கெலிஓய புகையிரத நிலையம்.




பல்லேதலவின்ன புகையிரத தரிப்பிடம்.




மீகம்மன புகையிரத தரிப்பிடம்.

**வணிக விற்பனை செயற்சாதனை**

**மதிப்பீடு வருமானமும் உண்மை வருமானமும்:-**

| விபரங்கள் | ஆரம்ப மதிப்பீடு (ரூ.மி.) | ஊண்மை வருமானம் (ரூ.மி.) |
|---|---|---|
| **வருமானம்** | | |
| பயணிகள் போக்குவரத்து | 3,018 | 3,266 |
| பண்டங்கள் | 308 | 301 |
| ஏனையவை | 620 | 432 |

**பயணிகள் போக்குவரத்து**

| விபரங்கள் | பயனிகள் எண்ணிக்கை | பயனிகள் வருமானம் |
|---|---|---|
| சாதாரன பற்றுச்சீட்டுப்பயனிகள் | 53,707,188 | 2,489,656,092 |
| பருவச்சீட்டுப்பயனிகள் | 48,100,260 | 776,615,161 |
| **மொத்தம்** | **101,807,448** | **3,266,271,253** |

2008 ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது புகையிரதத்தை பயன்படுத்திய பயனிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அது 2008 ம் ஆண்டில் மிலியன் 104 ஆனதுடன் 2009 ம் வருடத்தினுள் 102 மி. வரையான வீழ்ச்சியைக் காண முடியும். 2008 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பாதுகாப்புக்

காரணங்களுக்காக புகையிரதத்தில் பயனிகள் செல்வது குறைந்தும், 2009 ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதளர வீழ்ச்சியும் இந்நிலமை ஏற்பட காரணமாக அமைந்தது.

இருந்தும் பயனிகள் வருமானம் 2008 ம் ஆண்டில் மில்லியன் 2723 ஆகவும் 2009 ல் அது மில்லியன் 3266 வரை உயர்ந்துள்ளது. இது 20% சதவீத அதிகரிப்பாகும்.

**பொருட்கள் போக்குவரத்து**

2009 ம் ஆண்டில் பொருள் வருமானம் தொன், தொன் கி.மீ. எண்ணிக்கை கீழே குறிப்பிடப்படுமாறு காட்ட முடியும்.

| | 2008 | 2009 |
|---|---|---|
| பொருட்கள் வருமானம்(மில்லியன்) | 363.4 | 337.1 |
| பொருட்கள் தொன் (மில்லியன்) | 1.69 | 1.64 |
| தொன் கி.மீ. (மில்லியன்) | 120.66 | 118 |

மேல் அட்டவணைப்படி வருமானம் 2008 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2009 ஆண்டில் 7% சதவீதம் சரிவடைந்துள்ளது. அதேபோன்று 2008 ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2009 ம் ஆண்டில் பொருட்கள் தொன், தொன் கி.மீ. களிலும் சரிவைக் காண முடியும்.

எப்படியாகினும் இவ்வாண்டினுள் முன்னயது போன்று போக்குவரத்து சரிவு சம்மந்தமாக நோக்குகையில் புகையிரதத்தில் பொருட்கள் ஏற்றி இறக்குதலில் நேரம் சம்மந்தமாக ஏற்படும் பிரச்சினையால் புகையிரதத்திற்குப் பதிலாக மாற்று போக்குவரத்துச் சாதனங்கள் பயன்படுத்தப்படுகிறது. மேலும் பொருட்களின் கட்டண திருத்தமும் பிரதானமாக இதை பாதித்துள்ளது. தனியார் லொறி, கன்ரேனர்களிள் பொருட்களை கொண்டு செல்வதும் பெட்டி, என்ஜின்களின் குறைபாடும் தொன்களின் எண்ணிக்கை குறைவடைய பிரதான காரணமாகும்.

கீழுள்ள அட்டவணை மூலம் 2009 ம் ஆண்டில் பொருட்களின் தொன் எண்ணிக்கை அந்தந்த வர்க்கங்களின் பங்களிப்பை காட்டுகிறது.

| **பிரிவுகள்** | **தொண் எண்ணிக்கை** |
|---|---|
| விவசாய உற்பத்தி | 38,488 |
| எரிபொருள் உற்பத்தி | 454,835 |
| சிமெந்தி | 1,149,422 |
| உற்பத்தி | 3,229 |
| கட்டிடப்பொருட்கள் | 875 |
| வேறு | 639 |
| **மொத்தம்** | **1.647.488** |

சிவில் யுத்தம் நிறைவடைந்ததும் வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வதின் கீழ் பாதுகாப்பு அமைச்சுடன் ஏற்படுத்திக்கொண்ட உடண்பாட்டுக்கமைய 2009 ம் ஆண்டிலிருந்து மீணடும் புகையிரத்தின் மூலம் கொள்கலன்களை கொண்டு செல்வது கொழும்பிலிருந்து வவுணியா வரைக்கும் தற்காலிக வீடுகள் அமைக்குமுகமாக கொண்டு செல்லப்பட்டது. அதேபோன்று தனியார்களின் வியாபார கம்பனிகளுடன் ஏற்படுத்தக்கொண்ட உடண்படிக்கையடிப்படையில உணவுப்பொருட்களை கொழும்பிலிருந்து வவுணியா வரைக்கும் புகையிரத்தில் கொண்டு செல்வது ஆரம்பிக்கப்பட்டது.



மீண்டும் புகையிரத்தில்கொள்கலன் கொண்டு செல்ல ஆரம்பித்த போது.

**புகையிரத காணிகளை பாதுகாக்கும் செயல் திட்டங்கள்**

காணிகளை குத்தகைக்கு கொடுத்ததன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 41,730,820 ஆனதுடன் புதிதாக குத்தகைக்கு காணிகள் கொடுக்கப்படவில்லை. குத்தகை கோப்புக்கள் 7421 இருந்தும் நடைமுறைப்படுத்தப்படும் கோப்புக்களின் எண்ணிக்கை 6000 ஆகும்.

**கொள்வனவு செய்தல்**

2009 ம் ஆண்டினுல் நிறைவு செய்யப்பட்ட கேள்விப்பத்திர சபைகளின் முடிவுகளின் படி வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்தது ரூ.1,463.4 மில்லியனும், உள்நாட்டில் கொள்வனவு செய்ததது ரூ. 2,623.9 மில்லியனாகும்.

அதேபோல் 2009 ம் ஆண்டில்முற்பணக்கணக்குக்காக ரூ. 1800 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டில் முற்பணக்கணக்குச் செலவு ரூ. 1794 மில்லியனாகும். இன்ரநெற்றின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூ. 790.7 மில்லியனாகும்.

**சர்வதேச புகையிரத தொடர்புகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக தொடர்புகளை வைத்திருந்தல்.

>. SAARC – (Trans Asia Railway )

>. ESCAP – (Trans Asia Railway )ஆசிய பசுபிக் வலய பொருளாதார ஒத்துளைப்பு ஆணைக்குழு

>. UIC- உலக புகையிரத கூட்டு

>. ADB- ஆசிய அபிவிருத்தி வங்கி

>. BIMSTEC- ஆசிய வலய புகையிரத ஒத்துளைப்புக்கூட்டு

வலைய புகையிரத அபிவிருத்திற்காக சார்க் பிம்ஸ்டிக் (BIMSTEC) வலையத்தினுல் பொது புகையிரத வலையமைப்பொன்றை அமைப்பதற்க்கான செயலை இலங்கை புகையிரத சேவை நிறைவேற்றியது.

அரசாங்களுக்கிடையிலான புகையிரத சேவையை ஆரம்பிபதற்குரிய அடிப்படை உடண்படிக்கைகள் இரண்டை அடைவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

உலக புகையிரத சேவையில் அங்கத்தவராகி வருடாந்தம் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டமை.

புகையிரதத்தை அடித்தாளமாகக்கொண்ட கொள்கலன் முற்றம் ஒற்றை அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்வதற்குஆசியா அபிவிருத்தி வங்கியுடனான கலந்துரையாடலினால் உடன்பாட்டுக்கு வரப்பட்டது.

**புகையிரத பாதுகாப்புப்படை வருடாந்த பணிகள்.**

2009 ம் ஆண்டில் புகையிரத கட்டளைச்சட்டத்தின் கீழுள்ள குற்றங்களுக்காக புகையிரத பாதுகாப்புப் படையினால் 2213 நபர்களை கைதுசெய்ததுடன் மேலதிகப்பணமாக, தண்டப்பணமாக ரூ.1,840,998 அறவிடப்பட்டது.

மேலே கைதுசெய்யப்பட்ட நபர்களினுள் 29 நபர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி புகையிரத கட்டளைச்சட்டத்தின் வழக்குத்தொடர்ந்து ரூ. 61870 பணம் அறவீடு செய்யப்பட்டள்ளது.

பு.பா.படையினால் 2009 ம் ஆண்டினுள் குற்றவியல்சட்டம், மதுஒழிப்புச்சட்டத்தின் கீழுள்ள குற்றங்களுக்காக புகையரத எல்லைக்குள் 64 நபர்களை கைதுசெய்து இலங்கை பொலிஸ் மற்றும் மதுஒழிப்பு திணைக்களங்களினால் அவர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்ககுத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் சமர்பிக்கப்பட்ட சந்தே நபர்களுக்கு அதிகவேலைகளுடன்கூடிய/ அற்ற சிறைத்தண்டணை, இடை நிறுத்தப்பட்ட சிறைத்தண்டணைகள் வழஙங்கப்பட்டதுடன் இதுவரை முடிவடைந்த வழக்குகளினால் ரூ. 121,770 தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளது.

**புகையிரத உரிமையை பாதுகாத்தல்**

புராதன பொருட்களை பாதுகாப்பதற்காக நீண்ட காலங்களாக பிரயோகமாக பயன்படுத்தப் படாமலிருந்த புகையிரத நூதன சாலையை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து அதை 2009 மே மாதம் 11 ம் திகதி மக்கள் உரிமைக்காக விடப்பட்டது.



தேசிய புகையிரத நூதனசாலை மக்கள் உரிமைக்காக விடப்பட்ட நாள்.

**புகையிரத சேவையின் அபிவிருத்திக்குள்ள தடைகளும் எல்லைகளும்**

* நிருவாகப்பிரச்சினைகள்.
* ஆட்சேர்ப்பு, பதவிஉயர்வு வழங்குவதிலுள்ள எல்லைகள்.
* தீர்மானம் எடுப்பதில் முகாமைக்குள்ள எல்லைகள். உ.ம்- ஒழுக்கம்,தாபன வெற்றிடங்களை நிரப்புதலில் ஏற்படும் எல்லைகள்.
* சொத்துக்களை பராமரிப்பதற்காக உரிய முதலீடு கிடைக்காமை.
* திணைக்களச் சொத்துக்கள் வீழ்ச்சியடைதல்.
* நிபுணத்துவ அறிவு பற்றாக்குறை.
* புகையிரத காணிகளில் அத்துமீறி குடியேறல்.

**தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பெரிய திட்டங்கள்.**

- மஹிந்த சிந்தனையின் முன் தரிசனம் மூலம் செய்வதற்கு உத்தேசித்த திட்டங்கள்.
  - கரையோர புகையிரதப்பாதையை பெலியத்த வரை நீடித்தல்.

    தரமதிப்பீட்டு சபையின் மூலம் கிடைக்கப்பெற்ற திட்டங்களின் தரமதிப்பீடு நிறைவடையும் நிலையில் உள்ளது.
  - வட புகையிரத பாதையை காங்கேசந்துறை வரை நீடித்தல்.

    இந்த திட்டத்தின் மூலம் ஓமந்தையிலிருந்து பளை வரைக்கும், பளையிலிருந்து காங்கேசன்துறை வரை இரண்டு கட்டங்களின் கீழ் நிர்மாணப்பணிகளையும், வட பாதையில் இயங்குவதற்காக புதிய என்ஜின்களையும் பொருட்கள் பெட்டிகளையும் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

    தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரையிலான நிர்மானப்பணிகள் திணைக்களத்தினால் செய்யப்படுகிறது. ஓமந்தையிலிருந்து பளை வரைக்கும், பளையிலிருந்து காங்கேசந்துறை வரைக்கும் வெளிநாட்டு உதவியுடன் நிர்மாணப்பணிகளை செய்வதற்கு ஆரம்ப பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
  - மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலான பாதையை அமைத்தல்

    இந்த பாதையும் இரண்டு கட்டங்களின் கீழ் மதவாச்சியிலிருந்து மடு வரைக்கும், மடுவிலிருந்து தலை மன்னார் வரைக்கும் பாதையை அமைக்க எதிர்பார்க்கப்படுகிறது.
  - கொழும்பு கோட்டை – கடுநாயக்க விமான நிலையத்திற்கிடையில் சொகுசு புகையிரத சேவையை ஆரம்பித்தல்.

    எண்ணக்கரு அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.
  - பிரதான புகையிரத நிலையங்கள் 25 ஐ நவீனமாக்குதல்.

    பலவித முற்றங்களுடன் கூடிய கட்டிடத்தொகுதியாக இந்த புகையிரத நிலையங்களை நவீனமாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
  - ஊள்ளுர் கொள்கலன் முற்றத்தை அமைத்தல்.

    தனியார் துறையினரின் பங்களிப்புடன் கொள்கலன் சேவையை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் முன்னேற்பாடுகளை செய்யும் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படுகிறது
  - புகையிரத காணிகள், சொத்துக்களை அபிவிருத்தி செய்தல்.

    மறுசீரமைப்புக்காக திட்டங்கள் தீட்டப்படுகிறது.
  - கொழும்பை அண்மித்த சேவை மின்னியலாக்கல்.

    எண்ணக்கரு அறிக்கையை சமர்ப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
  - கொழும்பு நகரங்களுக்குள் மெற்றா புகையிரத சேவையை ஏற்படுத்துதல்.

    தொழிநுட்ப அறிவு சம்பந்தமாக பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- கரையோர புகையிரத பாதையை திருத்துதல்.
  - களுத்துறையிலிருந்து மாத்தறை வரை புகையிரத பாதையை மீண்டும் அமைத்தல் புகையிரத ஓட்ட வேகத்தை மணிக்கு 120 கி.மீ. வரை அதிகரிக்க வேண்டிய பாதை கட்டமைப்பை அமைத்தல்(தண்டவாளங்கள்/சில்பர்கட்டை/பெலெஸ்ற்) இந்த திட்டத்தின் குறிக்கோளாகும்.
  - அதிவேக தொடர்கள் 20 யையும் என்ஜின்கள் 03 யையும் கொள்வனவு செய்தல்.
  - இயந்திர மடுவங்கள் 03 ஐ புதிதாக அமைத்தல்.
  - இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
  - மேலதிக பாகங்களை கொள்வனவு செய்தல்.
  - புகையரத பணியாட்கள் 600 நபர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியை பெற்றுக்கொடுத்தல்.

- அதிவேகத்தொடர்கள் 13 ஐ இறக்குமதி செய்தல்.( 04 களனிவெளி பாதைக்கும், 07 பிரதான பாதைக்கும், 02 சுற்றுலா சேவைக்குமாக)

  கண்டி கொழும்பு நகரங்களுக்கு இடையையான சேவையின் தரத்தை உயர்த்துதல். களணிவெளி பாதையில் புகையிரத சேவையை விரிவாக்கல், புகையிரத சேவையை விரிவாக்கல் இந்த திட்டத்தின் எதிர்பார்த்த இலக்காகும்.

- தாங்கியுடன் கூடிய வண்டிகள் 15 ஐ கொள்வனவு செய்தல்.

  பெற்றோலிய பொருட்களை கொண்டு செல்வதை அதிகரிப்பதே எதிர்பார்த்த இலக்காகும்.

- புதிய சமிக்கை கட்டமைப்பை அமைத்தல்.

  அ. 20 பழைய அடிக்கடி பழுதடையும் முறைக்குப் பதிலாக புதிய முறைகளை அமைத்தல்.

- சபுகஸ்கந்த புகையரத பாதை

  கொள்கலன் முற்றத்திற்காக புகையிரத வசதிகளை வழங்கள்.

- மேலதிகமாக கொன்கிறீட் சில்பர் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை அமைத்தல்.

## நிதிஒப்பீட்டாய்வு

| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 3671 | 4019 | 4040 | 4232 | 4374 |
| பயணிகள் | 2723 | 3266 | 3329 | 3479 | 3583 |
| பொருட்கள் | 470 | 452 | 477 | 506 | 528 |
| வேறு | 478 | 301 | 234 | 248 | 262 |
| நிலையற்ற செலவு | 4480 | 3900 | 3915 | 3987 | 4052 |
| எரிபொருள் | 3035 | 2315 | 2320 | 2366 | 2402 |
| கொடுப்பனவு | 1204 | 1317 | 1324 | 1344 | 1371 |
| வேறு | 242 | 268 | 272 | 277 | 280 |
| பங்களிப்பு | (809) | 119 | 125 | 246 | 322 |
| நிலையான செலவு | 4152 | 4231 | 4358 | 4532 | 4532 |
| தேறிய இலாபம்/நட்டம் | (4961) | (4112) | (4233) | (4287) | (4210) |